**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**CUDDALORE DISTRICT, CUDDALORE**

**C.C.No. 320 of 2023**

அரசுதரப்பு **6-**வது சாட்சியின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வேலுமணி | வயது | :56 |
| தந்தை பெயர் | : பொன்னுசாமி | தொழில் | : வட்டார போக்குவரத்து அலுவலர் |
| கிராமம் | : சிவகாசி | ஜாதி | :-- |
| தாலுக்கா | :சிவகாசி | சமயம் | : |
| மாவட்டம் | :விருதுநகர் | மொபைல் | : 96003 20815 |

Solemnly affirmed in accordance with the provisions of Act XIV of 1967 விதிமுறைகளின்படி 21.07.2026 நாளாகிய இன்று செல்வி**. R.**தனம்**, B.A., B.L.,** தலைமை நீதித்துறை நடுவர்**,** கடலூர்**,** அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**(**எதிரி முன்னிலை**,** வழக்கறிஞர் முன்னிலை**)**

**(**சாட்சியம் திருவில்லிப்புத்தூரிலிருந்து **VC** மூலம் பதிவு செய்யப்பட்டது**)**

முதல் விசாரணை**:**

நான் தற்போது விருதுநகர் மாவட்டம் சிவகாசி வட்டார போக்குவரத்து அலுவலராக பணிபுரிகிறேன். கடந்த 26.04.2018 அன்று கடலூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை - I ஆக பணிபுரிந்தபோது திருப்பாப்புலியூர் காவல் நிலைய குற்ற எண். 142/2018 பிரிவு 279, 337, 304(A) இதச வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனம் TN-31-BF-0264 Honda Activa வாகனத்தை அலுவலகத்தில் வைத்து ஆய்வாளரின் வேண்டுகோளின் பேரில் ஆய்வு செய்தேன். ஆய்வின்போது வாகனத்தில் எவ்வித சேதாரமும் காணப்படவில்லை. வாகனத்தின் டயர் , தடைதிறன் நன்றாக இருந்தது. விபத்தானது வாகனத்தில் ஏற்பட்ட எவ்வித இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என்று மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை வழங்கினேன். TN-31-

BF-0264 Honda Activa வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை <u>அ.சா.ஆ.**3**</u> குறியீடு செய்யப்பட்டது.

அதே குற்ற எண்ணில் சம்மந்தப்பட்ட மற்றொரு வாகனம் PY-01-BK-6876 Bajaj Discover வாகனத்தை 27.04.2018 அன்று மதியம் 01.45 மணியளவில் அலுவலகத்தில் வைத்து வேண்டுகோளின் பேரில் ஆய்வு செய்தேன். ஆய்வின்போது வாகனத்தில் எவ்வித சேதாரமும் காணப்படவில்லை. வாகனத்தின் டயர், தடைதிறன் நன்றாக இருந்தது. விபத்தானது வாகனத்தில் ஏற்பட்ட எவ்வித இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என்று மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை வழங்கினேன். PY-01-BK-6876 Bajaj Discover வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை <u>அ.சா.ஆ.**4**</u> குறியீடு செய்யப்பட்டது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**:**

இரண்டு வாகனங்களும் விபத்து நடந்ததாக சொல்லப்படும் தேதியிலிருந்து 11 நாட்கள் காலத்தாமதமாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது என்றால் சரிதான். இடைப்பட்ட காலத்தில் இரண்டு வாகனங்களும் எங்கு இருந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எங்கு இருந்தது என்று கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் காவல் நிலையத்தில் இருந்ததாக கூறினார்கள். காலதாமதத்திற்கான காரணம் கேட்டேனா என்றால் அது பற்றி தகவல் கூறவில்லை.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை